**சுருக்கம்**

பொது சுகாதாரம் – உதவித்தொகை – அவயங்களை உபயோகப்படுத்த இயலாத நிலை IV–ன் கீழ் வகைப்படுத்தப்பட்ட யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ. 400/–லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி1) துறை**

அரசாணை (நிலை) எண் 388

நாள் 10.12.2014
திருவள்ளுவர் ஆண்டு – 2045
கார்த்திகை –24

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.336, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ப்பி–1) துறை, நாள் 20.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.167, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ப்பி–1) துறை, நாள் 15.5.2012.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர் கடித ந.க.எண்.177570/பூத2/ இரு.1/2011, நாள் 7.1.2013

•••••

**ஆணை :**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தங்களது அவயங்களை முழுமையாக பயன்படுத்த இயலாத யானைக்கால் IV ஆம் நிலை நோயாளிகளுக்கு நவம்பர்–2011 முதல் மாதந்தோறும் உதவித்தொகையாக ரூ.400/– வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உதவித்தொகை பெறும் பயனாளிகளின் விவரங்களை பராமரிப்பது குறித்து திருத்தம் வெளியிடப்பட்டது.

2. 2014–2015ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வு துறையின் மானியக்கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு) அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> “ 5654 நான்காம் நிலை யானைக்கால் நோயாளிகளுக்கு தற்போது வழங்கப்படும் மாத உதவித் தொகை ரூ.400/–லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்”

3) இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை தனது கருத்துருவில் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டு, சுயமாக பொருளீட்ட இயலாதவர்கள் மற்றும் தங்கள் அவயங்களை பராமரிக்க இயலாத 5654 நான்காம் நிலை நோயாளிகளின் நிலையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை ரூ.400/–லிருந்து ரூ.1000/–ஆக உயர்த்தி வழங்குவதற்கு உரிய ஆணை வெளியிடுமாறும், அதற்கான கூடுதல் செலவினம் ரூ.4,07,08,800/– (ரூபாய் நான்கு கோடியே ஏழு லட்சத்து எட்டாயிரத்து எண்ணூறு

மட்டும்) ஆகும் என்றும், அதற்கான நிதி ஒப்பளிப்பு ஆணையினை வெளியிடுமாறு அரசிடம் கோரியுள்ளார்.

**4) பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை** அரசு கவனமுடன் பரிசீலித்து மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டு, தங்களது அவயங்களை முழுமையாக பயன்படுத்த இயலாத 5654 நபர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை ரூ.400/–லிருந்து ரூ. 1000/– ஆக உயர்த்தி வழங்கவும், அதனை இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து வழங்கவும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளபடி இந்த உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படவேண்டும்.

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02 சமூக நலன் 101– மாற்றுத் திறனாளிகள் நலன் –MP, யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவி – 09. உதவித் தொகை – 01 – நடப்பு செலவிற்கான உதவித் தொகை (த.தொ.கு.2255 02 101 MP 0916).

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண் 457/HI/14 நாள் 25.8.2014ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை – 6.
முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 5.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 18.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 1/5/35.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து துணை இயக்குநர் சுகாதார பணிகள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
ஆணையர், மாற்றுத்திறனாளிகள் மாநில அலுவலகம், (புணரமைப்பு) வளாகம், ஜவஹர்லால் நேரு உள் வட்டசாலை, கே.கே. நகர், சென்னை – 79.

நகல்
நிதித்துறை, (சுகாதாரம் 1/ வ.செ.பொ.ப.,) சென்னை – 9.
சமூகநலம் மற்றும் சத்துணவு திட்ட துறை, சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இருப்புக்கோப்பு /சுத்த நகல்/அலுவ பிரிவு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

11.12.14